www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi7T

தென்காசி மாவட்டம்

தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2023

19-09-2023

-----

வகுப்பு 7

காலம்: 2.00 மணி — தமிழ் — மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) நெறி என்னும் சொல்லின் பொருள் ................

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2) ஒலியின் வரி வடிவம் ................ ஆகும்.

அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு

3) நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ................

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

4) தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ................

அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை

இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்

5) ஊர்வலத்தின் முன்னால் ................ அசைந்து வந்தது.

அ) தோரணம் ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

6) பகைவரை வெற்றி கொண்டாரைப் பாடும் இலக்கியம் ................

7) கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் ................

8) சொல்லின் முதலில் மட்டுமே இடம்பெறுவது ................

9) வாய்மை எனப்படுவது ................

10) தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் ................

**இ) பொருத்துக:** 5×1=5

11) கொடிகாத்தவர் - பாரதி

12) கப்பலோட்டிய தமிழர் - காமராசர்

13) பாட்டுக்கொரு புலவன் - வேலுநாச்சியார்

14) விருதுப்பட்டி வீரர் - சிதம்பரனார்

15) வீரமங்கை - திருப்பூர்குமரன்

**ஈ) கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:** 4×2=8

16) தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

17) மொழியின் இரு வடிவங்கள் யாவை?

18) காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

19) காடு - வரையறுக்க.

20) எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?

21) பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?

**உ) பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

22) 'அருள்நெறி ........... அன்பறமே' - எங்கள் தமிழ் பாடலை எழுதுக.

23) 'வாய்மை' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**ஊ) எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** **2×2=4**

24) குற்றியலிகரம் என்றால் என்ன?

25) ஔகாரம் எப்பொழுது முழுமையாக

26) வழக்கு என்றால் என்ன?

27) மூவகைப் போலிகள் யாவை?

**எ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** **3×3=9**

28) பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.

29) நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

30) தன் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

31) தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

**ஏ) கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக:** **2×5=10**

32) பொம்மலாட்டம் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

**(அல்லது)**

ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

33) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:**

முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப்பற்று - தாய்மொழிப் பற்று கொண்ட சான்றோர் - முடிவுரை.

**(அல்லது)**

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **4×2=8**

34) **தொகைச் சொற்களை விரித்து எழுதுக:**

இருதிணை - ............., .............

முத்தமிழ் - ............., ............., ..............

35) **கலைச்சொல் அறிவோம்:**

Media ...............

Dialogue ...............

36) **பிழையைத் திருத்தி எழுதுக:**

கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.

குழலி நடனம் ஆடியது.

37) **இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக:**

நீதிமன்றத்தில் தொடுப்பது ..................

'நீச்சத்தண்ணி குடி' என்பது பேச்சு ................

----------

சிவக்குமார். மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிப
வல்லம்-627809
தென்காசி மாவட்டம்.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com